# அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னவின் கூற்றுக்கு செஞ்சிலுவைச் சங்கக்குழு மறுப்பு அறிக்கை

பக்கங்கள் நான்கு — விலை ரூபா. 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 58 பிரமோதூத தை 11 (24-01-1991) வியாழன்

கடந்த வாரம் பத்திரிகையாளர் மாநாட்டில் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன தெரிவித்த கருத்துக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மறுத்துள்ளது. அக்கரைப்பற்றில் அதிரடிப்படை முகாமுக்கு அருகில் ஒரு குழியில் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட 44 இளைஞர்களின் சடலங்கள் காணப்பட்டதாகவும். திருக்கோவிலைச் சேர்ந்த 34 தமிழ் இளைஞர்கள் கைதானதாகவும் விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர். இதலத்தில் மூன்று மணி நேரத்தைச் செலவிட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினர் இக்குற்றச்சாட்டுக்களுக்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்று தெரிவித்துள்ளதாக அமைச்சர் பின்னர் அறிவித்திருந்தார். இம்மாதம் 18 ஆம் திகதி கொழும்பு பத்திரிகைகளில் அமைச்சரின் நிருபர்கள் மாநாட்டுச் செய்தி வந்தவுடன் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அமைச்சரின் கூற்றை மறுத்து ஓர் அறிக்கைவிட்டது

— 04 ஆம் பக்கம் பார்க்க

### விலை நிர்ணயம் வந்தும் விமோசனம் இல்லை:

# யாழ் குடாநாட்டில் உணவுப்பஞ்சம்

## பதுக்கல் நடவடிக்கைகள் தீவிரம்!

**யுத்த நிறுத்தத்தை தொடர்வது இல்லை என அரசு தீர்மானித்த பிறகு குடாநாட்டில் முன் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துள்ளது.**

விடுதலைப் புலிகள் அறிவித்த ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தைதொடர்ந்து மண்ணெண்ணெய், சீனி, மா முதலியவற்றின் விலை வீழ்ச்சியடையத் தொடங்கியிருந்தது.

அரசு யுத்த நிறுத்தத்தை தொடர்வதில்லை என்ற முடிவை அறிவித்ததும் விலை மளமளவென்று ஏறத் தொடங்கியது.

வளைகுடாவில் போர் வெடித்ததும் மத்திய கிழக்கில் இருந்து எரிபொருள் கிடைக்காது என்ற பீதியில் வியாபாரிகள் பதுக்கல் நடவடிக்கையில் இறங்கினார்கள். மண்ணெண்ணெயின் விலை 100 ரூபாவைத் தாண்டியது.

நிலைமை மோசமடைவதை அவதானித்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வர்த்தகர் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தியதையடுத்து பொருள்களுக்கு நியாய விலை நிர்ணயிக்கப்பட்டது.

விலை நிர்ணயம் அமுலுக்கு வந்ததும் சில வியாபாரிகள் பொருள்களை கட்டுப்பாட்டு விலைக்கு விற்கத் தொடங்கினர். மண்ணெண்ணெய் சவர்க்காரம், தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்களுக்கு நீண்டவரிசையில் பாவ

—04 ஆம் பக்கம் பார்க்க

## விலை உயர்வைக் கண்டித்து இன்று நகரில் ஊர்வலம்

விலைவாசி உயர்வு, அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கல், கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்கள் ஆகியவற்றை கண்டிக்கும் வகையிலான ஆர்பாட்ட ஊர்வலம் இன்று யாழ் நகரில் நடைபெறும்,

யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து காலை 8 மணிக்கு இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமாகும்.

இன்று நடைபெறும் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பற்றிய அறிவிப்பு நேற்று யாழ் நகர வீதிகளில் ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்பட்டது. (70)

## வடக்கு-கிழக்கு பகுதிக்கு இரு பாரிய அச்சகங்கள்

வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தில் இரண்டு பாரிய அச்சகங்கள் நிறுவப்படவுள்ளன.

வடபகுதியில் உள்ள சகல மாவட்டங்களதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய விதத்தில் ஒரு அச்சகம் மாங்குளத்தில் நிறுவுவதற்கு தற்போது ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திணைக்களங்களினதும், அரசாங்க நிறுவனங்களினதும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினதும் பொதுவான, குறிப்பான பத்திரங்கள்,

—04 ஆம் பக்கம் பார்க்க

## மேஜர் தாரணி வீரமரணம்

நேற்றுக்காலை கட்டுவனில் இருந்து வெளியேற முற்பட்ட ராணுவத்தினருக்கும் விடுதலைபுலிகளுக்கும் இடையே கடும் மோதல் இடம் பெற்றது.

மோதலைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கிமுகாம் சென்றனர். இம் மோதலில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஷெல்தாக்குதல்

நேற்று அதிகாலை 1 15 மணியளவில் கட்டுவன் மினி முகாமிலிருந்து பலத்த துப்பாக்கி வேட்டுக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கித் தீர்க்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பலாலி இராணுவ முகாமிலிருந்து அதிகாலை 4 மணி வரை பலத்த ஷெல்' தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (ப-10)

## கேரதீவில் வெள்ள நீரை பயணிகள் குடிக்கிறார்கள்

கேரதீவுப் பகுதியில் உள்ள கடைகளுக்கு முன்பாக குடிப்பதற்காகபெரல்களில் நிரப்பப்பட்டுள்ள தண்ணீர் மழைநீர் என்று பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர். அதுவும் நிலத்தில் தேங்கியிருந்த நீரையே இங்கு நிரப்பிவருவதாகவும், தாகத்தினால் மக்கள் அதனைப் பருகுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். கடைகளில் சமைக்கவும், தேநீர் தயாரிக்கவும் இந்த நீரையே உபயோகிப்பதாகவும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மொகவோயாவில் தாக்குதல் படையினர் உட்பட 27 பேர் பலி

நேற்று அதிகாலை அம்பாறை சிங்களக் குடியேற்றமான மொகவோயாவில் நடந்த தாக்குதலில் ராணுவத்தினர் உட்பட 27 பேர் பலியாகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குடியேற்றவாசிகளின் ஏழு வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. தாக்குதலின் முன்னர் ராணுவ காவலரண் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. (71)

## வவுனியாவில் படையினர் கெடுபிடி பயணிகள் திரும்புகின்றனர்

கொழும்பு செல்வதற்காகச் சென்ற பயணிகள் பலர் தமது பயணத்தைத் தொடர முடியாமல் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.

வவுனியா இராணுவ முகாமில் அனுமதியைப் பெறுவதற்காக ஆயிரக்கணக்கானோர் நீண்ட வரிசையில் நாள் கணக்காக காத்து நிற்கிறார்கள்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையில் மோதல் கண்ணிவெடி கண்டறியும் கருவி மீட்பு

நேற்று முன்தினம் காலை ஊர்காவற்றுறை ராணுவத்தினர் வெளியேற முற்பட்ட போது விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தித் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலினால் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஒரு சிப்பாய் காலை இழந்தார். ராணுவத்தினரிடமிருந்து [illegible] ரவை-60, நிலக்கண்ணி வெடிகள், கண்ணிவெடியைக் கண்டறியும் கருவி ஒன்று புலிகளால் மீட்கப்பட்டன. (71)

## வலி-வடக்கிலும் குண்டு வீச்சு

நேற்றும் வலிகாமம் வடக்குப் பகுதிகளில் [illegible]டுமையான வான் தாக்குதல்கள் இடம் பெற்றன.

காலை 10 மணியளவில் கட்டுவன், குரும்பசிட்டி பகுதியில் பொம்மர் வீசிய 4 குண்டுகளால் பல வீடுகள் சேதமடைந்தன.

கீரிமலைப் பகுதியில் மூன்று குண்டுகள் வீசப்பட்டதில் பல வீடுகள் சேதமடைந்தன.

## தொண்டமானாறில் தாக்குதல் வெளிக்கள நிலையம் சேதம்

நேற்றுக்காலை ஆறுமணி முதல் நண்பகல் வரை தொண்டமானாறுப் பகுதியில் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின இத் தாக்குதலினால் தொண்டமானாறுவெளிக்கள நிலையம் சேதமடைந்தது.

இதேவேளை காலை திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சில் மூன்று குடிமனைகள் சேதமடைந்தன. (71,39)

## வல்வை மீது நான்காவது நாளாக விமானங்கள் குண்டுமாரி

நேற்று நான்காவது நாளாகவும் வல்வெட்டித்துறை மீது ஸ்ரீ லங்கா விமானப்படை கடும் தாக்குதலை மேற்கொண்டது.

அதிகாலை முதல் மாலை வரை நடந்த குண்டுவீச்சில் வை-12 விமானம், அவ்ரோ விமானங்கள், ஹெலி ஒன்று என்பன ஈடுபட்டன.

நேற்றைய தாக்குதல்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## சங்கரத்தையில் குண்டு வீச்சு பெண் உட்பட மூவர் பலி

நேற்றுக்காலை வட்டுக்கோட்டை சங்கரத்தைப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தில் ஒரு பெண்மணி உட்பட மூவர் பலியானார்கள்.

கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த திருமதி சிவஞானவதியார் சச்சிதானந்தம் (50) ஸ்தலத்தில் உயிரிழந்தார்

சங்கரத்தைச் சந்தியில் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்த கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு (67, என்பவரும் பலியானார். தம்பு குழந்தைவேலு (58) கடுங் காயங்களுடன் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிறிது நேரத்தில் மரணமானார்

சங்கரத்தையில் 10 வீடுகளும் வட்டு உப அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள சில கடைகளும் சேதமடைந்தன. (12)

## மார்பு புற்று நோய்க்கு - இனி மார்பகத்தை அகற்றத் தேவையில்லை

மார்பக புற்றுநோய் உடம்பில் பரவுவதற்குக் காரணமான ஒரு பரம்பரை அலகினை பிரான்ஸ் மருத்துவ நிபுணர் குழுவொன்று கண்டு பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புகைத்தல் பழக்கமில்லாத பெண்களின் மரணங்களுக்கு பிரதான காரணமாக விளங்கும் இம்மார்பக புற்று நோயினை சத்திர சிகிச்சையில்லாது வேறு வழிகளின் மூலம் குணப்படுத்தக் கூடியதான வாய்ப்பினை இப்புதிய கண்டுபிடிப்பு ஏற்படுத்தலாமென்ற எதிர்பார்ப்பினையும் மேற்படி நிபுணர் குழு வெளியிட்டுள்ளது.

மார்பக புற்றுநோய்க்கு தற்போது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே சிகிச்சைமுறை சத்திரசிகிச்சை மூலம் மார்பகத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள இழையங்களையும் அகற்றுவதாகும். (70)

## தென்தமிழீழ பல்கலை மாணவருக்குத் துணைவேந்தர் நிதியிலிருந்து உதவி

யாழ். பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த மாணவர்களில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டும்' நிதி நெருக்கடிக் குள்ளாகியிருக்கும் மாணவர்களிற்கு துணைவேந்தர் நிதியிலிருந்து மாதாந்தம் 400 ரூபா வழங்கப்படவுள்ளதாக பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவித்தார்.

இவ்வாண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை இவ் உதவிப் பணம் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

துணைவேந்தர் நிதியில் பற்றாக்குறை நிலவுவதால் ஆரம்பத்தில் 50 மாணவர்களிற்கே இவ் உதவிப்பணம் வழங்கப் படவுள்ளது. இம் மாணவர்களில் பெரும் பாலானவர்கள் தென் தமிழீழத்தைச் சேர்ந்தவர்களாகும்.

தென் தமிழீழத்தைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்கள் இருந்த பொழுதிலும் துணைவேந்தர் நிதிப் பற்றாக் குறையால் அனைவருக்கும் இவ் உதவிப்பணம் வழங்க முடியாதுள்ளதாகவும் துணைவேந்தர் தெரிவித்தார்.

இதே வேளை துணைவேந்தர் நிதிக்கு உதவுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம் 25000 ரூபாவை வழங்கியுள்ளது. (ப-3,ப-32,70)

## வல்லைத் தொடர் தாக்குதலில் ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள் பலத்த சேதம்

(நமது வல்வை நிருபர் எம். சங்கரகாந்திலிங்கம்)

வல்வெட்டித்துறையையும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் நோக்கி ஸ்ரீலங்கா அரசின் வான் படைகள் தொடர்ச்சியாக இரவு, பகலின்றி நடத்தி வரும் தாக்குதல்களால் மூன்னூறுக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் 15க்கும் மேற்படடோர் உயிரிழந்தும் பலர் காயமடைந்தும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சிதைவுகளுக்குள்ளும் சிலர் சிக்கியிருப்பதால் இறந்தோர் தொகை இதுதான் என இன்னமும் சரியாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

### ஆலயங்களும் பலத்த சேதம்

இத்தாக்குதல்களால் இங்குள்ள பல பாடசாலைகளும், இந்து, கிறிஸ்தவ ஆலயங்களும், சனசமூக நிலையங்களும், வர்த்தக நிலையங்களும், வள்ளங்களும் மற்றும் உடைமைகளும் சேதமாகியுள்ளன.

வல்வெட்டித்துறை வைத்தியசாலைச் சுற்றாடலில் மகளிர் பாடசாலை, கல்வி மன்றம் ஆகியவையும் சேதமுற்றன. கல்வி மன்றத்தில் குண்டுவீச்சு நிகழ்கையில் பல ஆசிரியர், மாணவர்களும் இருந்தனர். ஆனாலும் இழப்புகள் தவிர்க்கப்பட்டன.

வல்லையில் ஆர். வி. ஜி நிறுவன கட்டிடம் முற்றாகச் சேதமுற்றது. வீடியோ சென்டர்களும் சேதமுற்றன. ஆதி கோயிலடி, கப்பலுடைவர் கோயிலடி, சிவகுரு வித்தியாசாலை ஆகியனவும் பாதிக்கப்பட்டன.

றோமன் கத்தோலிக்கத் தேவாலயம், சிவன்கோயில், அம்மன் கோயில் பொட்டணிப்பிள்ளையார் கோயில் ஆகியனவும் சேதமுற்றன.

### கடலிலும் குண்டுவீச்சு

ஆதிகோயிலடியில் மீனவர் வசிப்பிடங்கள், வள்ளங்கள், மற்றும் உடைமைகள் சேதமுற்றன. சனசமூக நிலையமும் இதனால் சேதமுற்றன. ஓர் குண்டு கடலில் வீழ்ந்து வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது

இங்கெல்லாம் உணவுப் பொருள், எரிபொருள், மருந்து வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

### புலிகளின் முதலுதவிப்பணி

பாதிக்கப் பட்டோருக்கான முதலுதவிப்பணிகள் விடுதலைப்புலிகளால் துரிதமாக அல்லும், பகலும் மேற்கொள்ளப்படுகின்றன.

காயமடைந்தோரை மருத்துவ சிகிச்சைக்குக் கொண்டு செல்ல மாட்டுவண்டிகளே பயன்படுத்தபட்டு வருகின்றன.

### எரிகுண்டால் வீடுகள் எரிந்தன

நெடியகாடு பிள்ளையார் கோயிலில் குளம் முன்பாக எரிகுண்டு வீசப்பட்டு வீடுகள் பல எரிந்தன.

மக்கள் பதுங்கு குழிகளுக்குள்ளும் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளாலும் முன்னெச்சரிக்கையாக நடந்து கொண்டதாலும் பல சேதங்கள், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (22)

## இரு சார்ஜன்ட்டுகள் கத்திக்குத்தில் படுகாயம்

புலன் விசாரணைப் பிரிவைச் சேர்ந்த இரு பொலிஸ் சார்ஜன்ட்டுகளுக்கும் மத்திய போக்குவரத்துச் சபைச் சாரதி ஒருவருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிக் கைகலப்பாகியபோது இரு பொலிஸாரும் மோசமான கத்திகுத்துக்கு உள்ளானார்கள்.

கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இருந்து மகரகம நோக்கிச் செல்லவிருந்த போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டியில் ஏறிய இந்த இரு பொலிஸ் சார்ஜன்ட்டுகள் குறித்த நேரத்திற்கு முன்பே [illegible] எடுக்குமாறு சாரதியை வற்புறுத்தி, சாரதி மறுத்தபோது அவரைத் தாக்கியதாகவும் இதனையடுத்து தன்னிடமிருந்த கத்தியால் சாரதி பொலிஸாரைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-11)

## விடுதலைப் புலிகள் நடத்திய மாவீரர் தின - கலை கலாசார போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

### கட்டுரை

மேற்பிரிவு: 1ஆம் இடம்; க. மதுமதி, நெடியகாடு, வல்வெட்டித்துறை 'தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி, 2 ஆம் இடம்: பத்மினி செல்வராஜா, பாடசாலை வீதி, வதிரி, கரவெட்டி. 'விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்' 3 ஆம் இடம்: யசோதா சோதிலிங்கம், ஐயனார்கோவில் வீதி, சண்டிலிப்பாய். 'விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும், பொன்னுக்கோன் யூட் பிரகாஷ் 70/9, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்'. 'விடுதலைப் போராட்டத்தில் மாணவர் பங்களிப்பு.'

தனியார் பிரிவு: 1 ஆம் இடம்; அநுமித்ரன் சங்கராபரணம் தென்மயிலை (மயிலிட்டி தெற்கு). தெல்லிப் பழை. 'தமிழீழப் போராட்டத்தில் பாரதத்தின் தலையீடுகள்' 2 ஆம் இடம்: 'மூருகனடியான்' 174, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 'எங்கள் வாழ்வும்' எங்கள் வைராக்கியமும் 'சசிகலா தர்மலிங்கம், ஜீ பி எஸ். வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம், 'இவர்கள் திருத்தப்பட வேண்டியவர்கள் அல்லர்' திருந்த வேண்டியவர்கள்,

(4ஆம் பக்கம்பார்க்க)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சின்னத்தம்பி ஆறுமுகம்

தோற்றம் 6 - 9 - 1935 மறைவு 3 - 2 - 1990

திதி: 24-01-1991

எம்மை எக்குறையும் இன்றி சீராட்டி பாராட்டி சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ வைத்த எம் தெய்வமே! ஆண்டு ஒன்று கழிந்தும் உங்கள் நினைவால் நாம் ஏங்கித் தவித்தாலும், உங்கள் ஆத்மா சாந்தியடைய நெஞ்சார இரு கரம் கூப்பி எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் சமூகந்தந்து அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

காளிகோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தங்கள் நினைவுடன் வாழும் அன்பு மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## அரசின் நிதிநிலைமை மோசமடைகிறது! அதனைத் தடுக்க இரகஸிய வங்கிக்கணக்கு

இலங்கையில் இரகஸிய வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு 'சிலான்' வங்கிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

சுவிஸ் வங்கி போன்று வாடிக்கையாளர்கள் இங்கும் இரகஸியமான முறையில் பணம் வைப்புச் செய்வதற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியிருந்தமை தெரிந்ததே.

தனது வங்குரோத்துப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவே அரசு இவ்விதமாக முயல்வதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## புலமைப் பரிசில் புள்ளியிடுதலில் தமிழ் மாணவர் புறக்கணிப்பு

பொலநறுவை கல்வி மாவட்டத்திலுள்ள 24 தமிழ் மொழிப் பாடசாலைகளிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய நூற்றுக் கணக்கான மாணவர்களில் ஒரேயொருவரே சித்தியடைந்துள்ளார்.

சிங்களமொழிப் பாடசாலைகளிலிருந்து பல மாணவர்கள் சித்தியடைந்திருக்கும் போது தமிழ்மொழிப் பாடசாலையிலிருந்து 'ஒரேயொரு மாணவரே சித்தியடைந்தமை குறித்து இப்பகுதி தமிழ்ப் பெற்றோர் அதிர்ச்சியடைந்துள்ளதுடன், இவ்வகையிலான 'தரப்படுத்தல்' ஒன்று இங்கு சிங்கள அதிகாரிகளினால் தமிழ் மாணவர்கள் மீது பிரயோகிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். (ப-1)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம் MILK WHITE LIQUID SOAP போத்தல் ரூ 90/-மட்டுமே. நெல்லியடி கட்டைவேலி ப.நோ கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது மில்க் வைற்-யாழ்ப்பாணம். 01167

### விற்பனைக்கு

என்னால் புதிதாகத்திறக்கப் பட்ட பண்ணையில் மிளகாய், கத்தரி கோவா, பீற்றூட், போன்ற மரக்கறி விதைகளும், நாற்றுகளும் வீட்டுத் தோட்ட உர வகைகளும் விற்பனை செய்யப் படுகின்றன. சிவஜங்கரன் விவசாய விற்பனை நிலையம், அராலி மத்தி. வட்டுக்கோட்டை 01134

## அரசாங்க அறிவித்தல்

26-01-1991 ஆம் திகதி காலை 10. 00 மணியளவில் கிட்டத்தட்ட 3000 திரிபோஷா வெற்றுப் பைகள் எனது பணிமனையில் வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆகக் கூடிய கேள்விக்காரர் பணம் முழுவதையும் உடனடியாகச் செலுத்தி குறித்த பொருளை அன்றைய தினமே அப்புறப்படுத்த வேண்டும். (இவ் வெற்றுப் பைகள் சீமெந்து பைகளின் அளவைக் கொண்டவை)

ஒப்பம்: ந. கனகசபை

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்

01165

# கிளிநொச்சிக்குளங்கள் உடைப்பெடுக்கும் நிலையில்

# அணை உடைப்பைத் தடுக்க நீர் திறந்துவிடப்படுகிறது

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள பல குளங்கள் உடைப்பெடுப்பதைத் தடுப்பதற்காக திறந்து விடப்பட்டுள்ளன.

ஏற்கனவே பெய்த மழையினால் நிரம்பியிருந்த இந்தக்குளங்கள் சிலதினங்களுக்கு முன்னர் பெய்த பெருமழையினால் உடைப்பெடுக்கும் நிலையை எட்டியது.

காட்டு வெள்ளம் தொடர்ந்தும் வந்து கொண்டிருப்பதினால் குளங்களில் நீரின் மட்டம் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

விஸ்வமடுக்குளம், பிரமந்தன்குளம், அக்கராயன்குளம், கனகாம்பிகைக்குளம், இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், பெரியகுளம், முறிப்புக்குளம் உட்பட மேலும் பல சிறிய குளங்கள் நீர் நிரம்பிய கலிங்கால் பாய்ந்த நிலையில் திறந்துவிடப்பட்டுள்ளன.

இரணைமடுக்குளத்தில் நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் 34 அடிக்கு மேல் நீர் வந்துள்ளது.

இதனால் இக்குளங்களுக்கு அருகில் குடியிருந்த பலகுடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து அகதிகளாகத் தங்கியுள்ளன.

குளக்கட்டுக்களின் பாதுகாப்பு நிலையை கருத்திற் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட நீரை அங்கு சேமிக்க நீர்ப்பாசனப் பகுதி நடவடிக்கையெடுத்துள்ளது. (35)

## 'சதாமும்' 'புஷ்ஷும்' தேறிவருகிறார்கள்

வயிற்றோட்டம், காய்ச்சல் நோய்களினால் கடுமையாகப் பீடிக்கப்பட்டிருந்த 'சதாமும்' 'புஷ்ஷும்' தேறி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆச்சரியப்பட வேண்டாம்! அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசையினுமல்ல தேறிவருபவர்கள். அவர்களின் பெயர் சூட்டப்பட்ட இரு குரங்குக்குட்டிகளே.

போர்னியோ தீவில் இருந்து அல்லது இந்தோனேசியாவில் இருந்து பிலிப்பைனஸ் நாட்டுக்குள் கடத்திவரப்பட்டதாகக் கருதப்படும் இந்தக் குரங்குக் குட்டிகளை உள்ளூர் வாசிகளிடம் இருந்து சில தினங்களுக்கு முன்னர் பறிமுதல் செய்த அதிகாரிகள் அவற்றை மணிலா அரசாங்க மிருககாட்சிசாலையில் ஒப்படைத்து இப்பெயர்களைச் சூட்டியிருந்தனர்.

இவை சாதாரண குரங்குகள் அல்ல ஆங்கிலத்தில் கிபொன்ஸ் எனஅழைக்கப்படும், உலகில் அரிதாகி வரும் ஒருவகை விசேட உயிரினமாகும். இதனால் தான் அவற்றுக்கு ஏற்பட்ட நோய்களைக் குணப்படுத்துவதில் அதிகாரிகள் அக்கறைகாட்ட வேண்டிவந்தது. (74)

## அன்னைதிரேசாவுக்கு மற்றொரு விருது



அன்னை திரேசா, சத்திய ஜித்ரே ஆகிய இருவர் ஏஸியாடிக் சங்கத்தின் இவ் வருட விருதைப் பெறுகின்றனர். இம் மாதம் 31 ஆம் திகதி கல்கத்தாவில் நடைபெறவுள்ள இச்சங்கத்தின் 200வது நிறுவக நாளன்று இவ் விருவரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

## கூட்டுறவு முறைமை பற்றி மாணவர்களுக்குப்பயிற்சி வழங்கப்பணிப்பு

பாடசாலை மாணவர்களுக்குக் கூட்டுறவு முறைமையில் கூடுதல் பயிற்சி வழங்குமாறு கல்வி அமைச்சு சகல கல்விப் பணிப்பாளர்களையும் சுற்று நிருபம் மூலம் பணித்துள்ளது.

இச்சுற்று நிருப பணிப்புரையின்படி பாடசாலைகளிற்

★ பாடத்திட்டத்தில் கூட்டுறவு முறைமை முக்கிய பகுதியாகச் சேர்த்துக் கற்பித்தல்,

★ ஆண்டு 9 10 மாணவர்களுக்குக் கூட்டுறவுச் செயலாற்றுத்துறை பற்றிய பயிற்சிகளை வழங்கல்

★ கூட்டுறவு எண்ணக்கருவை பாடசாலை மாணவர்களிடம் தோற்றுவிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மாணவர்கள் தம் நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தூண்டுதல்.

★ இதற்குத் தேவையான சகல விபரங்களையும் மாவட்டக் கூட்டுறவுச் சபையிடம் இருந்து பெற்று மாணவர்களுக்குப் போதித்தல்.

★ கூட்டுறவுத் துறையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கல்.

ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப-17)

## உணவு விநியோக மகாநாடு

பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் உலர் உணவு விநியோகம் சம்பந்தமான மகாநாடு யாழ் செயலகத்தில்நாளை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது

இக் கூட்டத்தில் சகல திணைக்களங்களையும் சேர்ந்த உயர் அதிகாரிகள், கலந்துகொளவர். (66)

## 3000 வருடங்கள் பழமை வாய்ந்த தமிழர் சின்னம் கண்டுபிடிப்பு

தமிழகம் சிதம்பரனார் மாவட்டத்தில் மூவாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதெனக் கருதப்படும் புராதன சின்னங்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் உச்சம் பரப்பு, சாயபுரம் என்னும் இடங்களில் பதினாறு ஏக்கர் நிலப்பரப்பில் சிதைந்த வண்ணக்கலையங்களும் இரும்பிலான அம்புமுனைகளும்கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்றும் இவை மூவாயிரம் வருடங்களுக்கு முற்பட்டதென நம்பபபடுவதாகவும் தமிழகக் கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் தெரிவித்துள்ளார்.

## பதவி போனதுடன் ஜே. ஆருடன் சேர்ந்தது 'அறளைத்தனம்'



தென்கிழக்காசியாவின் தந்திரமான இராஜதந்திர அரசியல்வாதியெனக் கருதப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அறளைத்தனம் குடியேறிவிட்டது நிரூபணமாகிவிட்டதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று எழுதியுள்ளது.

'சண்டே ஒப்சேவர்' இதழுக்காக ஜே. ஆர். எழுதிய கட்டுரை ஒன்றில் ஆங்கிலக் கவிஞர் 'போப்' இன் கவிதை ஒன்றினை அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த அடிகளை பிழையாக ஜே ஆர். குறிப்பிட்டுள்ளதாக பிரபல இலக்கியவாதி றெஜி சிறிவர்த்தனா சுட்டிக்காட்டி ஜே ஆரின் ஞாபகசக்தி மங்கி வருவதற்கு இது ஒரு உதாரணம் எனக்குறிப்பிட்டு மேற்படி பத்திரிகைக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அமைதிப்படை வாபஸான பிறகு இந்திய-இலங்கை உறவில் விரிசல் ஏற்பட்டது. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட, ஈழத்தமிழர்பற்றிய இந்தியக் கொள்கைக் குழப்பமும் தென்பட்டது.

இந்நிலையில், இந்திய வெளிநாட்டமைச்சர் வி.ஆர். சுக்லாவின் வருகை முக்கியத்துவம்பெறுகிறது. இதையொட்டி, 'சன்டே ரைம்ஸ்' நிருபர் கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவர் என். என். ஜாவைப்பேட்டி கண்டார். அப்பேட்டியின் சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

### இனப்பிரச்சினைக்கு

## நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை! இந்தியத் தூதுவர் கருத்து

இந்திய வெளிவிவகார அமைச்சர் வி. சி சுக்லா எதிர் வரும் 28 ஆம் திகதி இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளுவது இலங்கையிலும் இந்தியாவிலும் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை இந்திய அரசும் மாநில அரசுகளும் பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்து வரவேற்று இருக்கும் இந்நேரத்தில் இவ்விஜயம் சமாதானத்தை உருவாக்கத்தூண்டுகோலாக அமையுமோ என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக இந்தியத் தூதுவர் என். என். ஜா அவர்கள் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவினது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கினார்;

''திரு. சுக்லா பாராளுமன்றப் பதவியை இழந்த காரணத்தினால் வெளியுறவு அமைச்சர் பதவியின் அதிகாரம் குறைந்து விடவில்லையா?'' என வினவப்பட்டபோது, இந்திய அரசியல் யாப்பின்படி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காது, ஆறு மாதத்திற்கு அமைச்சர் பதவியை வகிக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்தினார். சென்ற ஆனி மாதம் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இருபகுதியினருக்கிடையே நம்பிக்கையும் விசுவாசமும் இருக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன என்றார்.

### இராணுவ நடவடிக்கை

இலங்கை இராணுவம் வெற்றிபெறவில்லையா எனக் கேட்டபோது அவர் விரிவாகவே தனது கருத்தை எடுத்துரைத்தார் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை மாங்குளம் தாக்குதல் மாபெரும் வெற்றி கிழக்கின் சூழ்நிலை வித்தியாசமானது. இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரை வடக்கில் அதனால் ஒன்றுமே சாதிக்க முடியவில்லை. புலிகள் வடக்கில் தமது நிலைகளை ஸ்திரப்படுத்தியுள்ளனர்.

### யுத்த நிறுத்தம்

'விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் சந்தேகிப்பதும், இது விசுவாசமான செயலா என யோசிப்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது, புலிகளின் பிரகடனம் விசுவாசமானதோ இல்லையோ சமாதானத்திற்கான எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் பற்றிப்பிடித்து, எப்படிப்பட்ட நிபந்தனையானாலும் அரசு ஏற்றுப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும் என்றார். மக்களின் உயிரும் உடைமைகளும் சொத்துக்களும் இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்டு இருப்பதால், ஐயப்பாட்டை ஒதுக்கி அரசு பேச்சுவார்த்தையைத்தொடங்கிசமாதானத்திற்கு வழிகோல வேண்டும்' என்றார் ஜா.

அரசாங்கம் பேச்சு வார்த்தைக்கு அடிப்படையாக முன்வைத்த நிபந்தனைகளைப் பற்றிக் குறிப்பிட்ட அவர் இந் நிபந்தனைகளை விதித்த அதே நேரத்தில் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்திருக்க முடியும் என்றார் இவருடைய இக் கருத்து அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை மீறியது தவறு என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது போல் அமைகிறது.

விடுதலைப்புலிகளினால் விதிக்கப்பட்ட புதிய நிபந்தனைகளைப் பற்றிக் கேட்டபோது, அவை யாவும் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட வேண்டியவையென்றும் இவற்றைக் காரணமாகக் காட்டி பேச்சுவார்த்தையைத் தட்டிக் கழிக்கக் கூடாது என்றும் ஜா கூறினார்.

தமிழர் அபிலாஷைகள் பற்றி இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்குப் பதிலளித்த தூதுவர் ''சமஷ்டி ஆட்சி நாம் அனுபவித்த ஒன்று அதில் குறைகள் இருக்கலாம் ஆனால் அனுகூலங்களே அதிகம் பல இனங்கள் வாழும் ஒரு நாட்டுக்கு இது ஒரு வரப்பிரசாதம்'' என்றார்.

# ரெல் அவிவ் மீது ஈராக் 3ஆம் தடவையாக

# ஸ்காட் ஏவுகணைத் தாக்குதல்; ஐவர் பலி

## தமிழகச் சட்டசபையில் நேற்று அமளி துமளி!

தமிழக சட்டசபையில் நேற்று மீண்டும்பெரும் அமளி துமளி வெடித்தது. இதன் விளைவாக அ. தி. மு. க உறுப்பினர்கள் தற்போது நடைபெற்று வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் கலந்து கொள்ள சபாநாயகர் தமிழ்க்குடிமகன் தடைவிதித்தார்.

முன்னதாக அவையில் கேள்விநேரத்தின் போது திருநாவுக்கரசு தலைமையிலான மூன்று உறுப்பினர் அணியை 'அ. தி. மு. க - 2' என சபாநாயகர் குறிப்பிட்டமையை அ. தி. மு. க சட்டமன்றத் தலைவர் எஸ். ஆர். ராதா கண்டித்தார்.

இதைத் தொடர்ந்து அ. தி. மு. க வின் இருபிரிவினருக்கும் இடையில் பெரும் கைகலப்பு ஏற்பட்டது. சபாநாயகரும் தாக்கப்பட்டார்.

காவலர்கள் இவர்களை வெளியே இழுத்துச் சென்றபோதுவெளியேபொலிஸாருக்கும் அ. தி. மு. க உறுப்பினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது எஸ். ஆர். ராதாவின் ஷேர்ட் கிழிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக முதலமைச்சர் மு. கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்தார்.

## சபாநாயகத்துக்கு கல்வியமைச்சில் உயர் பதவி

கல்வி இராசாங்க அமைச்சின் மேலதிகச் செயலாளராகக் கடமை புரிந்த முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. வே. சபாநாயகம் கல்வி அமைச்சில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நீண்டகாலத்துக்குப் பின் மேற்படி பதவியுயர்வு பெற்ற தமிழர் இவரேயாவர்.

கரவெட்டியைச் சேர்ந்த திரு. சபாநாயகம் நீண்டகாலமாக யாழ்ப்பாணம் வவுனியா பகுதிகளில் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

## 1034 இலங்கைப் பெண்கள் குவைத்தில் தடுத்துவைப்பு

குவைத் மீது ஈராக் படையெடுத்ததில் இருந்து மொத்தம் 1034 இலங்கைப் பெண்கள் தாம் பணிபுரியும் இடங்களில் நிர்ப்பந்தமாகத்தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை நட்புறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களுள்பெரும்பாலோர் குறைந்த ஊதியம் பெறும் பணிப பெண்களாவர்.

தங்கள் அமைப்பு முன்பு 500 பணிப் பெண்களை ஈராக்கிய பொலிஸாரின் உதவியுடன் மீட்டதாகச்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குவைத்தில் சிக்கியுள்ள இப்பெண்கள் சார்பாக கொழும்பில் உள்ள ஈராக்கிய தூதரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (66)

### வவுனியாவில்...

அங்கு செல்பவர்கள் முதலாவது கியூவில் நின்று தமது பெயர்களைப் பதிவு செய்து இரண்டாவது வாசையில் சென்று விசாரணைகளை முடித்து, மூன்றாவது வரிசையில் நின்று அனுமதிப்பத்திரத்தைப் பெறவேண்டியுள்ளது.

வவுனியா முகாமில் அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்தே இரவு தங்குபவர்கள் படுப்பதற்கு பாயைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள். (66)


## காலமானார்

### திரு.செல்லையா பொன்னுச்சாமிதேசிகர்

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆர்மோனிய சக்கரவர்த்தியுமாகிய செல்லையா பொன்னுச்சாமி தேசிகர் 2.01.91 இல் சிவபதமடைந்துவிட்டார் அன்னார் மகேஸ்வரி, காலம் சென்ற இராமலட்சுமி ஆகியோரின் அன்புக் கணவரும் Dr ஜெகதீசன் (தாரணி வைத்தியசாலை-வட்டக்கச்சி), பார்வதி (சங்கீதவித்துவாட்டி) முருகதாஸ் (தீசாஸ் சைக்கிள் வேக்ஸ் உரிமையாளர்) சகுந்தலாதேவி, Dr ஆராவமுதன், உமாகாந்தன், பாரதி ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவபாதம் (மிருதங்க வித்துவான்) நவயுவநாதன், வசந்தாதேவி, இராசலட்சுமி, குணராணி, இந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது பூதவுடல் 24 01 . 91 வியாழக்கிழமை (இன்று) காலை 10.00 மணியளவில் அளவெட்டி கேணிப்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மகாத்மா வீதி,
அளவெட்டி,வடக்கு,
அளவெட்டி

தகவல்: பொ. முருகதாஸ்
(மகன்)

01164


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்ஸ்' உள்ள அச்சகத்தில் 24-01-1991இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நேற்று அதிகாலையில் இஸ்ரேல் மீது ஈராக் மூன்றாவது தடவையாக ஸ்காட் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது இவ் ஏவுகணைத் தாக்குதலினால் தலைநகர் ரெல்அவிவ் பலத்த சேதமடைந்துள்ளது. நான்கு மாடிக்கட்டிடப் ஒன்று தரைமட்டம்ஆனது பத்துக்கும் மேற்பட்ட கட்டிடங்களும் சேதமடைந்தன. வயோதிபர்கள் மூவர் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்த அதிர்வு பல மைல்களுக்கு அப்பாலும் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

### பற்றியட்தவறிவிட்டது!

இஸ்ரேல் மீது ஈராக் இருமுறை நடத்திய ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகளான பற்றியட் ஏவுகணைகளை அமெரிக்கா இரு தினங்களுக்கு முன்னரே இஸ்ரேலுக்குக் கொண்டு சென்று பொருத்தியது நேற்றைய ஈராக்கின் தாக்குதலின் போது ரெல் அவிவ் நோக்கி வந்த ஸ்காட் ஏவுகணைகளை அமெரிக்காவின் பற்றியட் ஏவுகணைகள் 'கவனிக்காது' விட்டதாக இஸ்ரேலியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### இஸ்ரேலிய அமைச்சரவை - படைத் தளபதிகள் மாநாடு

ஈராக்கின் நேற்றைய பயங்கரமான ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிய அமைச்சர்களும், படைத் தளபதிகளும் அவசர மாநாடு ஒன்றைக் கூட்டினர். எனினும் மாநாடு எங்கு நடைபெற்றது எனக் கூற இஸ்ரேல் அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

### இஸ்ரேலியர் அபிப்பிராயம்

இஸ்ரேல் இதுவரை ஈராக்கை திருப்பித் தாக்காமல் இருப்பது குறித்து இஸ்ரேலிய மக்களிடம் பி.பி.ஸி. எடுத்த கருத்துக் கணிப்பில் அநேகமான இஸ்ரேலியர்கள் இஸ்ரேல் ராணுவம் அமைதியாக இருப்பதை வரவேற்றுள்ளனர்.

### பக்தாத் வழமைபோலவே

கடந்த ஒரு வார காலமாக ஈராக் தலைநகர் பக்தாத் மீது அமெரிக்கா மற்றும் நேச அணியினரது விமானங்கள் நடாத்திய தாக்குதல் குறித்து செய்தி வெளியிட்ட CNN நிறுவனம் இதுவரை நடந்த குண்டு வீச்சினால் பக்தாத்தின் பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன, மின் விநியோகம் பாதிக்கப்பட்டுவிட்டது. எனினும் நகரம் இன்னமும் சோபை இழந்து விடவில்லை எனத் தெரிவித்தது.

### பாலுணவு உற்பத்தித் தொழிற்சாலை சேதம்

நேற்று முன்தினம் பக்தாத்தில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சினால் அங்குள்ள குழந்தைகளுக்கான பாலுணவு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று சேதமடைந்துள்ளது இதனிடையே வளைகுடாப் போர் இன்னமும் பல நாட்களுக்கு நீடிக்கப்போவதாகவும்அடக்கப்பட்ட மக்களின் மீட்பராக சதாம் ஹுசைன் உருவாகுகின்றார் எனவும் பக்தாத் வானொலியில் குறிப்பிடப்பட்டது.

### வோஷிங்டன் போஸ்ட் கணிப்பு

அமெரிக்க மற்றும் நேச அணிகள் தொடர்ந்து நான்கு மாதங்களுக்கு ஈராக் மீது குண்டு வீச்சு நடாத்தினால் இரண்டாயிரம் ஈராக்கியர் பலியாவர் என வோஷிங்டன் போஸ்ட் தினசரி கூறுகிறது.

### பஸ்ராமீதுகடும்தாக்கு

நேற்றும் ஈராக்கின் துறைமுக நகரான பஸ்ரா மீது அமெரிக்க, பிரெஞ் விமானங்கள் கடும் குண்டு வீச்சை நடாத்தின. குண்டுகளின் வெடிப்பொலி நாற்பது மைல் தூரத்தில் உள்ள ஈரானிய நகரான ஹோரமஷாரிலும் கேட்டதாம்.

ஈராக்கில் இருந்து இதுவரை இரண்டாயிரம் அரபு நாட்டுப் பிரஜைகள் ஈரானுக்கு அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

### குண்டு வெடிப்பு தொடர்கிறது

லெபனானிலும், துருக்கியிலும் அமெரிக்க நிறுவனங்கள் மீது நேற்றுக் குண்டுத் தாக்குதல் நடந்தது.

எண்ணெய்க் கிணறுகள் குவைத்தில் தீயிடப்பட்டதைத் தொடர்ந்து எரிபொருட்களின் விலை உலக சந்தையில் உயர்ந்துள்ளது.

### தரைப்படை பயிற்சி எடுக்கிறது

ஈராக்கிய தரைப்படை நேற்று டாங்கி மற்றும் ஆட்லறி தாக்குதலைப் பயிற்சியாக மேற்கொண்டது.

### ஜேர்மன் பதுங்கு குழியில் ஹுசைன்

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட தடுப்புச்சுவர்கள் கொண்ட பதுங்கு குழியில் ஜனாதிபதி மாளிகையின் கீழ் வசிப்பதாக ஜேர்மன் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது. இதேவேளை ஏழுநாள் போரில் அமெரிக்க அணிகள் பத்து சதவீதமே வெற்றிகொள்ள முடிந்துள்ளதாக ரஷ்ய ராணுவ ஜெனரல் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

### மாவீரர் தின...

வசந்தி நமசிவாயம், 7 ஆம் ஒழுங்கை, கோவிற்புதுக்குளம், வவுனியா' 'வீரகாவியம் படைத்த லெப். சீன், 3 ஆம் இடம்;மிதிலைச்செல்வி கணபதிப்பிள்ளை, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்' 'வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மறவர் படையும் மறக்குடி மகளிர்பங்களிப்பும்',

தொடரும்

### யாழ்...

ளையாளர் நின்றனர்.

நியாய விலையில் பொருள்களை விற்பதாக பாசாங்கு செய்து கொண்டே சில வர்த்தகர்கள் பதுக்கல் நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை சீரற்ற காலநிலை, இராணுவக் கெடுபிடிகள், போக்குவரத்துக் கஷ்டம் இவற்றின் மத்தியிலும் கொழும்பில் இருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு லொறிகள் வந்தவண்ணம் இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வார காலத்தில் அரிசியின் விலை என்றுமில்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது உணவுத் திணைக்களம் மாரி காலத்திற்கென அரிசியைத் தனது களஞ்சியத்தில் இம்முறை சேமித்து வைக்காததும் ஒரு காரணம்.

கடந்த ஜூன் மாதம் முதல் 29 வாரங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்க வேண்டிய நிவாரணம் ஏழு வாரங்களுக்கே வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சகலருக்குமான3 ஆம்வாரத்துக்கான விசேட பங்கீட்டுக்கு அரிசி வழங்கப்படாதது மற்றொரு காரணம். (66)

### வல்லை...

வல்லை நெடியகாட்டுப் பகுதியை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டது. இதனால் வல்லை மகளிர் வித்தியாசாலை, நெடியகாட்டுப் பிள்ளையார் கோவில், கோவிற்பிள்ளையார் சுற்றாடல்கள் பெரும் பாதிப்படைந்தன.

வல்வைச் சந்தி, உதயசூரிய கடற்கரைப்பகுதிகளில்பலவீடுகளும் சேதமடைந்தன. எரிகுண்டுகளும்வீசப்பட்டன. (39)

### மேஜர்...

புலிகள் தரப்பில் மேஜர் தாரணி (எஸ். மதிவதனி) பூநகரி வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

### அமைச்சர்...

அக்கரைப்பற்று முகாமுக்கு தாங்கள் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்ததாகவும் தமது முடிவுகளையும் சிபார்சுகளையும் முகாம் அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும் ஆனால் தாங்கள் எந்தப்பகிரங்க அறிக்கைகளையும் விடுக்கவில்லை என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

## வவுனியாவில் ஒருவர் காயம்

நேற்றுப் பகல் பதினொரு மணியளவில் வவுனியா இராணுவ முகாம் பகுதியில் நின்ற பொது மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் ச. முகுந்தன்(25) நெல்லிப்பழை காயமடைந்தார். (ப-14,70)

## பதுக்கல்

நேற்று முன்தினம் சிறுவிளானிலுள்ள அப்புத்துரை கடையில் இருந்து நான்கு பெரல்கள் பதுக்கல் மண்ணெய் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டது. (48)

### வடக்கு...

வெளியீடுகள், அறிக்கைகள், புத்தகங்களை அச்சிடுவதும், புத்தகங்கள் பதிவேடுகளைக் கட்டுவதும் முக்கிய நோக்கங்களாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது (66)

### கேரதீவில்...

தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் நெருப்புக்காய்ச்சலுக்கு இத்தகைய சுகாதாரச் சீர்கேடுகளே காரணம் எனச் சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (71)